Dinathanthi 27.01.2025

மோசடி புகார்கள் எதிரொலி

# அதிகாரப்பூர்வ மின்னஞ்சலுக்கு மட்டும் கல்வி நிறுவனங்கள் பதிலளிக்க வேண்டும்

## ஏ.ஐ.சி.டி.இ. அறிவுறுத்தல்

சென்னை, ஜன.27–

அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில் (ஏ.ஐ.சி.டி.இ.) மற்றும் மத்திய கல்வி அமைச்சகம் சார்பில் பல்வேறு பணியிடங்களுக்கு பணி நியமன கடிதங்கள், அதுதொடர்பான தகவல் தொடர்புகளில் மோசடிகள் நடைபெறுவதாக புகார்கள் வந்ததை தொடர்ந்து, அது குறித்து ஏ.ஐ.சி.டி.இ. துணை இயக்குனர் பிரசாந்த்காரத், அனைத்து விதமான உயர்கல்வி நிறுவனங்களுக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார். அதில் கூறப்பட்டு இருப்பதாவது:–

இந்த வகையான மோசடிகள் போலி மின்னஞ்சல் முகவரி, ஆவணங்கள், ஆள்மாறாட்டம் மூலமாக மேற்கொள்ளப்படுகிறது. இதனால் பாதிக்கப்படும் நபர்கள் பணத்தை இழக்க நேரிடுகிறது. அதேநேரம் அது ஏ.ஐ.சி.டி.இ.யின் பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்துகிறது. எனவே, அனைத்து உயர்கல்வி நிறுவனங்களும் இந்த மோசடி விளம்பரங்கள் குறித்து அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தெரியப்படுத்தி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். வேலைவாய்ப்புகளை கையாளும்போது எச்சரிக்கையாக இருக்கவும், அதுகுறித்த தகவலின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தவும் அறிவுறுத்த வேண்டும். அதேபோல், ஏ.ஐ.சி.டி.இ.யின் அதிகாரப்பூர்வ தளத்தில் இருந்து மின்னஞ்சல் பெறப்பட்டால் மட்டுமே கல்வி நிறுவனங்கள் அதற்கு பதிலளிக்க வேண்டும். அதைத்தவிர பிற நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் இதுபோன்ற போலி விளம்பரங்கள் செய்வது தெரியவந்தால் அதுகுறித்து சைபர் குற்றப்பிரிவுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.